# கிருபையுள்ள வார்த்தை

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22


Vol - 22 | July ஜூலை | 2021

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-






கௌரவ ஆசிரியர் BETTY CHOATE    ஆசிரியர் பிலேமோன் ராஜா


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 7 |
| வாலிபர் பகுதி | 9 |
| சிறுவர் பகுதி | 10 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா**, M.Th.,
**R. ஆன்டனி ராஜா**, D.Th.,M.B.A (Bible Studies)
**Dr. V.S. இம்மானுவேல்**, M.Sc., D.D., **C. டேனியல் கார்த்திக்**, B.Sc.,
**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**நம்பிக்கை T.V. யில்**

**ஞாயிறு மதியம் 3:30 மணி**

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7:00 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன்ராஜா**, M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா**, M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

**OUR ENGLISH TV PROGRAM**

**SALVATION TV**

**Every Sundays 2pm**

**Speakers:**

**Jerry Bates & Kingsly Rajah**




## கிருபையுள்ள வார்த்தை புதிய வெளியீடு

### கிருபையின் கீதங்கள்

விபரங்களுக்கு :

**92 4421 4421, 92 4431 4431**


**பாடல் புத்தகம்**

421 பக்கங்கள்
514 தமிழ் பாடல்கள்
29 ஆங்கில பாடல்கள்
100 சிறுவர் பாடல்களுடன்

## கிருபையுள்ள வார்த்தை

நியாதிபதியை சந்திக்க நம்மை
ஆயத்தப்படுத்தும் நீதியுள்ள வார்த்தை

**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




Send Postal Expenses only
and
receive
The Voice of Truth
International

# கர்த்தரை சந்திக்க ஆயத்தப்படுவோம்

ஆசிரியர் உரை
P.C. பிலேமோன் ராஜா



**அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எனது அன்பின் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள் !**

இந்த மாதம் கர்த்தரை சந்திக்க ஆயத்தப்படுவதை பற்றி உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். ஏறக்குறைய ஒரு ஆண்டுக்கு மேலாக, நம் நினைவினை ஆண்டு கொண்டிருப்பது 'கொரோனா' என்கின்ற வைரஸ், அதனால் கடவுளை பற்றிய சிந்தனை என்பது மழுங்கியிருகின்றது அல்லது மறக்கப் பட்டிருக்கின்றது. நியாயத்தீர்ப்பினை பற்றிய சிந்தனையும் நீதியுள்ள நீதிபதியாகிய கிறிஸ்துவை சந்திப்பதை பற்றிய சிந்தனையையும் நினைவுப்படுத்துவது இந்த கடின சூழ்நிலையில் மிகவும் ஏற்புடையதாக இருக்கும் என கர்த்தருக்குள் நம்புகிறேன்.

கடவுளை வழிபடுதலை என்பது சூழலுக்கு வசதியாக மாற்றியதால் **(ஆமோஸ் 4)**. கடவுளே அவைகளை அறுவெறுக்கின்றார் **(ஆமோஸ் 5)**, ஆகையால் நான் உங்களை தண்டிக்கப் போகின்றேன், நீங்க தண்டிக்கப்படாதபடி கடவுளாகிய தன்னை சந்திக்கும்படி நினைவுப் படுத்துகின்றார். **ஆமோஸ் 4:12** "ஆகையால், இஸ்ரவேலே! உனக்கும் இவ்வாறே செய்வேன், இஸ்ரவேலே! இப்படிதான் செய்யப் போவதால் உன் கடவுளைச் சந்திக்க தயாராயிரு!." ஏறக்குறைய அதே சூழலில் இருக்கின்ற நமக்கும் அந்த நினைவுப்படுத்தல் அவசியமாக இருக்கின்றது.

ஆண்டவர் இந்த பூமியில் முதல் முறை வந்தபோது, அவரை சந்திக்க ஆயத்தமாயும் ஆவலாயும் இருந்த அன்னாள் என்ற விதவைதாயிடமிருந்து, நாம் பாடங்களை கற்று, ஆண்டவரின் இரண்டாம் வருகையில் அவரை சந்திக்க நம்மை ஆயத்தப்படுத்த முயற்சி செய்வோம். **லூக்கா 2:36–38** "ஆசேருடைய கோத்திரத்தாளும், பானுவேலின் குமாரத்தியுமாகிய அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி இருந்தாள்; அவள் கன்னிப்பிராயத்தில் விவாகமானது முதல் ஏழு வருஷம் புருஷனோடே வாழ்ந்தவளும், அதிக வயது சென்றவளுமாயிருந்தாள். ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி, ஆராதனைசெய்து கொண்டிருந்தாள். அவளும் அந்நேரத்திலே வந்து நின்று , கர்த்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக்குறித்துப் பேசினாள்."

### 1. தேவாலயத்தைவிட்டு நீங்காமல்...

அன்னாளிடமிருந்து நாம் கற்றுக்கொள்கின்ற முதல் காரியம் "அவள் தேவாலயத்தினை விட்டு நீங்காமல், அங்கே இருந்தாள்" என்பது, அதாவது அவள் கடவுளுக்கடுத்த காரியங்களில் தன்னை அதிகம் ஈடுபடுத்திக்கொண்ட பெண்மணியாக அவளை நாம் அறிய முடிகின்றது.

சபைக்கடுத்த காரியங்களில் அதாவது சபை கூடிவருகின்ற காரியங்களில் நாம் எப்படி இருக்கின்றோம்? நமது ஆர்வமும் ஈடுபாடும் எப்படி உள்ளது? யாராவது நினைவுபடுத்தி செய்கின்றோமா? நாமே தானாக ஈடுபடுகின்றோமா?

இன்றைய சூழல் பரலோக கடவுளால், நமக்குள் அந்நியோந்நியம் பக்திவிருத்தியை அதிகரிக்க உண்டாக்கப்பட்ட அவசியமான சபை கூடுகைகள், இப்பொழுது ஆன்லைன் கூடுகைகளாக இருக்கின்றது. அதனில் பழகிப்போன அநேகர், இப்படியே இருப்பது தங்களுக்கு சொகுசாக (வசதியாக) இருக்கின்றது என எண்ணுவதும், செயல்படுவதும் மிகவும் பாவமானதாகும். மேலும், அது கடவுளின் மாபெரும் நோக்கத்தினை உடைப்பதுமாகும். **(எபி 10:24–28)**, என்பதனை நினைவில்கொள்வோம்.

வேலை, பணம், படிப்பு மற்றும் வேறு ஏதேனும் காரணங்களுக்காக புறக்கணிக்கின்றோமா? ஆண்டவர் இயேசு விண்ணரசிற்கு முதலிடம் கொடுக்கச் சொன்னதை நினைவில் கொள்வோமாக, **மத்தேயு**

6:33 "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்."

நம்முடைய ஏக்கம் அல்லது எதிர்பார்ப்பு என்ன? எதை நோக்கி பயணிக்கின்றோம்? சற்று நின்று நிதானித்து அறிவோம். தாவீது அரசனை கேட்போம் என்றால் "மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது. என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயிருக்கிறது; நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்?" **(சங் 42:1–2)** என தனது ஏக்கத்தினை தெரிவிக்கின்றார். ஆதலால் ஆலயத்திற்கு செல்வது அவருக்கு மிகவும் மகிழ்ச்சியானதாகவும் **(சங் 122:1–2),** இன்பமானதாகவும் **(சங் 84:1–2),** ஆக சிறந்த தேர்வாகவும் **(சங் 84:10)** இருந்தது. சபைக்கூடி வருகின்ற காரியங்கள் ஒவ்வொன்றும் முக்கியமானவையாக இருக்கின்றது. நமக்கு எப்படி இருக்கின்றது? அதை பற்றிய நமது மனோநிலையை கர்த்தருக்கு முன்பாக சீர்செய்வோம்.

## 2. இரவும் பகலும் உபவாசித்து...

இந்த அன்னாளிடமிருந்து நாம் கற்றுக்கொள்கின்ற அடுத்த காரியம் அவள் தாழ்மையுள்ள பெண்ணாக இருந்திருக்கிறாள். உபவாசம் என்பது யூதர்கள் தங்களை கடவுளுக்கு முன்பாக தாழ்த்துகின்றதற்காக செய்ததை நாம் பைபிளில் அறிய முடிகின்றது. அன்னாள் இரவும் பகலும் உபவாசித்தாள் என்பதிலிருந்து, அவள் கடவுளுக்கு முன்பாக தன்னை எப்பொழுதும் தாழ்மைப்படுத்து கின்றவளாக இருந்திருக்கின்றாள்.

உபவாசம் என்பது மக்கள் தங்கள் தவறினை ஒத்துக்கொண்டு, தங்களை திருத்தி, வருத்தி எல்லாம் வல்ல கடவுளுக்கு முன்பாக, தங்களை தாழ்மைப்படுத்தி அவரது இரக்கத்திற்காக கெஞ்சுகின்ற செயலாகவும் இருந்ததை அறிய முடிகின்றது **(யோனா 3),** மேலும், சில நேரங்களில் உபவாசம் என்பது தங்களுக்கு ஏற்பட்டுள்ள தீங்கிலிருந்து காப்பாற்றிட கடவுளின் உதவி கேட்டும் செய்வதாக இருந்துவருகின்றது **(எஸ்தர் 4).** சில நேரங்களில் உபவாசம் என்பது, தங்களை பரிசுத்தப்படுத்துவதற்காகவும், தாங்கள் செய்யப் போகின்ற காரியத்திற்காக தங்களை பெலப்படுத்து வதற்காகவும் செய்யப்பட்டும் இருக்கின்றது **(யாத் 34, மத் 4)** எல்லாவகையிலும் அது தாழ்மையின் செயலாக, வடிவமாக இருந்திருக்கின்றது.

ஆண்டவர் இயேசுவும், அப்போஸ்தலர்களும், முதலாம் நூற்றாண்டு சபையாரும், மூப்பர்களும் உபவாசித்ததை நாம் புதிய ஏற்பாட்டில் வாசிக்கின்றோம். ஆண்டவர் இயேசு உபவாசிப்பதை ஊக்கப்படுத்துகின்றார். அப்போஸ்தலர்கள் ஏன் உபவாசிக்கவில்லை என வினவியவர்களிடம், நான் போன பின்பு உபவாசிப்பார்கள் என்றார். **மத்தேயு 9:15** "அதற்கு இயேசு; மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர் துயரப்படுவார்களா? மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும், அப்பொழுது உபவாசிப்பார்கள்."

நாமும் நம்மை தூய்மைப்படுத்த உபவாசமிருக்கலாம். ஆனால் அநேகர் கடவுளின் ஆசீர்வாதங்களை பெற உபவாசிக்கின்றனர். செல்வம், பணம், படிப்பு போன்ற உலக விருத்திக்காக ஆவிக்குரிய காரியங்களை பயன் படுத்துகின்றனர். நாம் எதையும் கடவுளிடம் போராடி பெற வேண்டியதில்லை. அவர் அதினதின் காரியங்களை அதினதின் காலங்களில் நேர்த்தியாக செய்கின்றவர் **(பிர 3:11).** உபவாசம் இருப்பது கட்டாயம் அல்ல, ஆனால் நம்மை கட்டுப்படுத்த செய்யலாம், தாழ்மைப்படுத்த செய்யலாம். கடவுளுக்கு முன்பாக தாழ்மைப்படுதல் கிருபைகளை பெற்றுத்தரும் **யாக் 4:6,10** "அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே, ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது.க ர்த்தருக்குமு ன்பாகத்த ாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்."

## 3. ஜெபம்பண்ணி...

அடுத்ததாக, அன்னாளிடமிருந்து ஆயத்தத்திற்காக கற்றுக்கொள்ளுகின்ற அடுத்த பண்பு, அவள் ஜெபிக்கின்ற பெண்ணாக இருந்திருக்கின்றதினை நாம் அறிகின்றோம். இரவும் பகலும் இடைவிடாமல் ஜெபிக்கின்ற பழக்கம் அவர்களுக்கு

இருந்திருக்கலாம். இடைவிடாமல் என்பது தொடர்ந்து என்பதாக இல்லாமல், தொடர்ச்சி என்பதாக இருக்கின்றது. அதாவது எந்த நேரம் ஜெபித்துக்கொண்டே இருப்பது என்றல்ல, குறித்த நேரங்களில் தவறாமல் ஜெபிப்பதாகும்.

பேதுருவும் யோவானும் ஜெபம் செய்கின்ற நேரத்தில் ஜெபிக்க சென்றனர். (அப் 3). தானியேல் தினமும் மூன்று வேளை ஜெபிக்கின்றதை தொடர்ச்சியாக செய்தார் (தானி 5). நாம் ஜெபிக்கின்ற பழக்கமுடையவர்களாக இருக்கின்றோம். எப்படி ஜெபிக்கின்றோம், பொதுவாக காலை எழுந்ததும் ஜெபிக்கின்ற பழக்கம் இருக்கும், அதனை எப்படி செய்கின்றோம். தினமும் ஒரு நேரத்தினை குறித்து அதில் ஜெபிக்கின்றோமா? இல்லை 6 மணி, 7 மணி, 10 மணி என எப்பொழுது எழும்புகிறோமோ அப்பொழுது ஜெபிக்கின்றோமா?

சரி, தினமும் எதற்காக ஜெபிக்கின்றோம்? யாருக்காக ஜெபிக்கின்றோம்? வெறுமனே நமக்காக, நம் குடும்பத்திற்காக. மாம்சத்திற்குரியவைகளுக்காக ஜெபிக்கின்றோமா? சபைக்காக. இரட்சிக்கப் படாதவர்களுக்காக, பின்மாற்றக்காரர்களுக்காக, தேசத்திற்காக, ஆளுகிறவர்களுக்காக என மற்ற அனைவருக்காக ஜெபிக்கின்றோமா? நமது ஜெபங்களில் எது பிரதானமான இடத்தினை பிடித்திருக்கின்றது. நாம் எதற்காக, தொடர்ச்சியாக ஜெபித்துக் கொண்டிருக்கின்றோம். நம்மை நாமே ஆய்வு செய்வோம். **யாக் 4:2–3** “நீங்கள் இச்சித்தும் உங்களுக்குக் கிடைக்கவில்லை; நீங்கள் கொலை செய்தும், பொறாமையுள்ளவர் களாயிருந்தும், அடையக்கூடாமற் போகிறீர்கள்; நீங்கள் சண்டையும் யுத்தமும் பண்ணியும், நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சிந்திக்கிறதில்லை. நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்.”

ஜெபம் என்பது சுயத்திற்காக, சுயநலனிற்காக இருந்துவிடாதபடி எச்சரிக்கையாக இருப்போம். யோபு தன் நண்பர்களுக்காக வேண்டுதல் செய்தான். கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார் **(யோபு 42)**. ஆண்டவர் இயேசு, நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகின்றார் **(1 யோவா 2:2)**, பரிசுத்த ஆவியானவர் நமக்காக வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு வேண்டுதல் செய்கின்றார் **(ரோமர் 8:26, 27)**. ஆகையால் நாம் நமது ஜெபங்கள் சுயநலமற்றதாக இருப்பதில் கவனம் செலுத்துவோம். ஏனெனில் அதுவே கர்த்தருக்கு பிரியமானது. **1 தீமோ 2:1–3** “நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும். நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது.”

### 4. கர்த்தரைப் புகழ்ந்து...

அன்னாளிடம் நாம் கற்கின்ற அடுத்த நற்பண்பு கர்த்தரைப் புகழ்வதாகும். சங்கீதக்காரன் தினமும் 7 வேளை துதிப்பதாக சொல்கின்றான். சங் 119:164 உமது நீதிநியாயங்களினிமித்தம், ஒரு நாளில் ஏழுதரம் உம்மைத் துதிக்கிறேன்.

துதிகளின் மத்தியில் வாசம் செய்கின்றவரை, கேரூபீன்கள் மற்றும் சேராபீன்களால் பரிசுத்தர் பரிசுத்தர் என போற்றப்படுகின்றவரை, நாம் தினமும் கர்த்தரை துதிக்கின்றோமா? சபைக்கூடுகைகளில் கூட பாடல் பகுதி முடிந்து செல்கின்றோமா? பாடல் நேரங்களில் எப்படி இருக்கின்றோம்? இருதயத்தின் ஆழத்திலிருந்து, பக்தியோடு துதிக்கும்படி பைபிள் நம்மை உற்சாகப்படுத்துகின்றது. **எபே 5:17–21** “ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள். துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினாலே நிறைந்து; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து, தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்.”

உதடுகளின் கனியாகிய நன்றிபலியை ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நமது பரலோக பிதாவிற்கு நாள்தோறும் ஏறெடுப்போம் **(எபி 13:15).** அன்னாள் கர்த்தரை சந்திக்க, அவரை துதிக்கின்றவளாக இருந்தாள். கர்த்தர் எப்பொழுது வருவார் என்பதை அறியா நாமும், சங்கீதக்காரனை போல எக்காலமும் அவரை துதிப்போம். **சங் 34:1–3** கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும். கர்த்தருக்குள் என் ஆத்துமா மேன்மைபாராட்டும்; சிறுமைப்பட்டவர்கள் அதைக்கேட்டு மகிழுவார்கள். என்னோடே கூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்; நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக.

## 5. அவரைக்குறித்துப் பேசினாள்...

அன்னாள் ஆண்டவரை குறித்து மற்றவர்களிடம் பேசினாள் மற்றும் அறிவித்தாள் என்பது அவளிடமிருந்து நாம் கற்கின்ற மிகச் சிறந்த பண்பாகும். நாமும் ஆண்டவரை பற்றிய நற்செய்தியை நானிலமெங்கும் பரவ செய்திட வேண்டிய பொறுப்பாளர்கள். அது நம் தலையாய கடமை. **1 கொரி 9:16, 17** சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ, நான் உற்சாகமாய் அப்படிச் செய்தால் எனக்குப் பலன் உண்டு; உற்சாகமில்லாதவனாய்ச் செய்தாலும், உக்கிரான உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப் பட்டிருக்கிறதே."

பாவத்திலிருந்து மனுக்குலத்தினை இரட்சிக்க அது ஆகச்சிறந்த சிறப்பான வேலை ஆகும். சொல்ல ஆள் இல்லையென்றால், யாரும் கேள்விபட முடியாதே. ஆகையால் நற்செய்தி சொல்ல வேண்டியதின் அவசியத்தினை உணர்வோம். **ரோமர் 10:13–14** ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?

ஆண்டவர் இயேசு நமக்கு கொடுத்த மிகப்பெரிய ஆகச்சிறந்த பொறுப்பினை சிறப்பாக செய்து, அவர் வருகைக்கு நாமும் ஆயத்தமாகி, அநேகரை ஆயத்தப்படுத்துவோம். **மத் 28:1–20** "அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி; வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள், இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்." ஆமென்.

இறுதியாக, பிரியமானவர்களே, ஆண்டவர் இயேசு மீண்டும் வரப்போகின்றார். அவரை சந்திக்க நம்மை ஆயத்தப்படுத்துவோம். ஏனெனில், நமது கிரியைகளுக்கு தக்க பலனை தரும்படியாக வருகின்றார். (**II கொரி 5:10**).

நமது சிந்தை, பேச்சு, செயல் என எல்லாவற்றையும் சீர்தூக்கி பார்த்து, கிறிஸ்துவை போல மாற்றிடுவோம். நாட்கள் பொல்லாதவையாக இருக்கின்றது. நாளைக்கு பார்த்துக்கொள்ளலாம் என எண்ணாமல், இன்றைய நாளே இரட்சணிய நாளாக பயன்படுத்துவோம். **(எபே 5:16, 2 கொரி 6:2 ).**

### சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. A. கார்பஸ் பிலேமோன் – மதுரை
2. A. ஹானா ஜோதி – மதுரை
3. டேனியல் – மதுரை
4. அன்னாள் – மதுரை
5. S. லக்ஷிதா – கரூர்
6. S. கனிஸ்கா – கரூர்
7. M. செந்தில்குமார் – கரூர்
8. M. ஜோனத்தான் – கரூர்
9. P. டேனியல் பவுல்ராஜ் – மதுரை
10. M. ராஜா – கரூர்
11. S. ஸ்டெல்லி கிருபை – திருப்பூர்

# மணவாளனை சந்திக்க ஆயத்தப்படுவோம்

சகோதரி : பேபி ராஜா



அன்பான சகோதரிகள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

சகோதரிகளே, இந்த மாதம், மணவாளனாகிய ஆண்டவர் இயேசுவை சந்திக்க ஆயத்தப்படுவதை குறித்து, உங்களுடன் பேசுவதில் எனக்கு சந்தோஷம். கிறிஸ்து மணவாளனாகவும், சபை அவரது மணவாட்டியாகவும் இருக்கின்றதை நாம் வேதத்தில் வாசிக்கின்றோம். **வெளி 21:9** "பின்பு, கடைசியான ஏழு வாதைகளால் நிறைந்த ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் என்னிடத்தில் வந்து; நீ இங்கே வா, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன் என்று சொல்லி,"

அப்போஸ்தலனாகிய பவுலும், கற்புள்ள கன்னிகையாக சபையானது கிறிஸ்துவிற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளதை நினைவுப்படுத்து கின்றார். **2 கொரி 11:2** "நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காகத் தேவவைராக்கியமான வைராக்கியங் கொண்டிருக்கிறேன்." மேலும், கணவன் மனைவி உறவை, கிறிஸ்துவிற்கும் சபைக்கும் உள்ள உறவோடு ஒப்பிட்டு பேசுவதை நாம் **எபேசியர் 5:21-32** வசனங்களில் வாசிக்கின்றோம்.

கிறிஸ்துவின் திருச்சபையாகிய மணவாட்டியே, மணவாளனை சந்திக்க ஆயத்தப்படு என்பது வேதாகமத்தின் அறைகூவல்.

மத்தேயு 25:1-10 வசனங்களில், மணவாளனை சந்திக்க ஆயத்தமாக இருந்த மணவாட்டியாகிய 10 கன்னிகைகளை குறித்து நாம் படிக்கின்றோம். அதில் 5 பேர் புத்தியுள்ளவர்கள் என்றும், 5 பேர் புத்தியில்லாதவர்கள் என்றும் ஆண்டவர் இயேசு சொல்கின்றார். காரணம் என்ன? அவர்கள் அறிவு குறைவானவர்கள் என்பதா? நிச்சயம் இல்லை. அவர்கள் ஆயத்தம் குறைவானவர்களாக இருந்தனர்.

நன்றாக கவனியுங்கள். அவர்கள் ஆயத்தமில்லாத ஆட்கள் இல்லை. ஆயத்தமானவர்கள் ஆனால் அதில் குறைவானவர்களாக இருந்தனர். அவர்கள் தங்களை எப்படி ஆயத்தப்படுத்த வேண்டும் என சொல்லப்பட்டும், அலட்சியமாக, சோம்பலாக ஒரு வேளை தங்கள் ஞானத்தின்படி, இந்த ஆயத்தம் போதும் என தங்களில் தாங்களே திருப்திபட்டு இருக்கலாம். பவுல் அப்படிபட்டவர்களை கடுமையாக விமர்சிக்கின்றார். **2 கொரி 10:12** "ஆகிலும் தங்களைத் தாங்களே மெச்சிக்கொள்ளுகிற சிலருக்கு நாங்கள் எங்களைச் சரியாக்கவும் ஒப்பிடவும் துணிய மாட்டோம்; தங்களைக் கொண்டு தங்களை அளந்துகொண்டு, தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக் கொள்ளுகிற அவர்கள் புத்திமான்களல்ல."

ஆயத்தமாக இருந்தவர்கள் மணவாளனுடன் சென்றார்கள். ஆயத்தம் குறைவானவர்கள் தங்கள் வாய்ப்பை வீணடித்தனர். இங்கே கவனிக்கத்தக்க இன்னொரு காரியம் 2ம் வாய்ப்பு வழங்கப்படவில்லை. மாறாக, ஆயத்தம் குறைவானவர்கள், ஆயத்தமற்றவர்களாகவே கருதப்பட்டு, ஆயத்தமற்றவர்கள் பெறும் தண்டனைக்கு உரியவர்களாக, மணவாளனால், புறக்கணிக்கப்பட்டார்கள். ஆகையால், மணவாளனாகிய ஆண்டவர் இயேசுவை சந்திக்க ஆயத்தப்படுகின்ற நாம் அதில் முழுமையாக கவனம் செலுத்தி, வேதவசனங்களின்படி நம்மை ஆயத்தப்படுத்தி, மணவாளனை சந்தித்து, நித்திய காலமாக மறுமையில், அவரது மகிமையில் வாழ முயற்சிப்போம் மற்றும் செயல்படுவோம். பரலோக பிதா தாமே, நமக்கு அதற்கு வேண்டிய ஞானத்தினையும், பெலத்தினையும், கிருபைகளையும் தந்தருளுவாராக.

## நற்றிணை

- நற்றிணை என்னும் இந்நூல் தனிப்பாடல்களாகப் பலராலும் பாடப்பட்டு பின்னர்த்தொகுக்கப்பட்டது.
- இஃது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும். எட்டுத்தொகை நூல்கள் இவையெனக் குறிப்பிடும் பழைய வெண்பாவில் முதலிடம் பெற்றுத்திகழ்வது நற்றிணை ஆகும்.
- எட்டுத்தொகை நூல்களில் 'நல்' என்ற அடைமொழி பெற்ற நூல் இதுவேயாகும். இதனை நற்றிணை நானூறு என்றும் கூறுவர்.
- இந்நூலில் கடவுள் வாழ்த்தோடு 401 பாடல்கள் ஆசிரியப்பாவில் அமைந்துள்ளன. அவைகளில் பெரும்பான்மையானவை 9 அடி முதல் 12 அடிகள் கொண்ட பாடல்களாக அமைந்துள்ளன. இந்நூலைத் தொகுத்தவர் யாரென அறியப்படவில்லை என்றாலும் தொகுப்பித்தவன் 'பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி' ஆவார்.
- நற்றிணைப் பாடல்கள் அனைத்தும் அகப்பொருள் அமையப் பெற்ற பாடல்களாம். நற்றிணையில் 7 அடிகள் கொண்ட பாடலும் 13 அடிகள் கொண்ட பாடல்களும் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.


## வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 120/-

G-Pay No. 92 4421 4421

அல்லது, வங்கிக் கணக்கில் செலுத்த,

A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 6.45 - 7.00 a.m (TAMILNADU Contact Mobile : **92 4421 4421 & 92 4431 4431**) **Nambikai TV :** *Every Sunday 3.30 p.m.* **Salvation TV :** *Every Sunday 2.00 p.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.

# எஜமானனை சந்திக்க ஆயத்தப்படுவோம்

E. ஜோசப் பிரதீப்

அன்பான வாலிபர்களே! உங்கள் அனைவரையும், இறைமகன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

எந்த ஒரு செயலையும் செய்வதற்கு ஆயத்தம் அவசியம். ஆயத்தமின்றி அணுகும்போது அது தோல்வியாகவும், நஷ்டமாகவும் முடிகின்றது. ஆயத்தம் என்பது ஒருமுறை செய்து முடிக்கிற செயல்பாடு அல்ல. அது ஒரு தொடர் (செயல்) பயிற்சியாக இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட விஷயத்திற்காக எப்பொழுதும் ஆயத்தமாயிருந்தவர்கள், தங்கள் வாழ்க்கையில் பெரிய வெற்றியை அடைந்ததை, நாம் அநேகமுறை கேள்விப்பட்டிருக்கிறோம்.

பரிசுத்த வேதாகமமும் நம்முடைய எஜமானாகிய கர்த்தரை சந்திக்க, நம்மை எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கும்படி ஆலோசனை சொல்கிறது.

**லூக்கா 12:40-48** “அந்தப்படியே நீங்கள் நினையாத நேரத்தில் மனுஷகுமாரன் வருவார், ஆகையால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள் என்றார். அப்பொழுது பேதுரு அவரை நோக்கி; ஆண்டவரே, இந்த உவமையை எங்களுக்கு மாத்திரம் சொல்லுகிறீரோ, எல்லாருக்கும் சொல்லுகிறீரோ என்று கேட்டான். அதற்குக் கர்த்தர்; பணிவிடைக்காரருக்குத் தகுதியான காலத்திலே படிகொடுக்கும்படி எஜமான் அவர்கள்மேல் அதிகாரியாக வைக்கத்தக்க உண்மையும் விவேகமுமுள்ள விசாரணைக்காரன் யாவன்? எஜமான் வரும்போது அப்படியே செய்கிறவனாய்க் காணப்படுகிற ஊழியக்காரன் பாக்கியவான். தனக்குள்ளதெல்லாவற்றின்மேலும் அவனை விசாரணைக்காரனாக வைப்பான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அந்த ஊழியக்காரனோ, என் எஜமான் வர நாள் செல்லும் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு, வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் அடிக்கவும், புசித்துக் குடித்து வெறிக்கவும் தலைப்பட்டால், அவன் நினையாத நாளிலும், அறியாத நேரத்திலும், அந்த ஊழியக்காரனுடைய எஜமான் வந்து, அவனைக் கடினமாய்த் தண்டித்து, உண்மையில்லாதவர்களோடே அவனுக்குப் பங்கை நியமிப்பான். தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான். அறியாதவனாயிருந்து, அடிகளுக்கு ஏதுவானவைகளைச் செய்தவனோ, சில அடிகள் அடிக்கப்படுவான். எவனிடத்தில் அதிகங்கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும்; மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள்.”

மேற்சொன்ன வசனங்களில், உண்மையில்லாத மற்றும் ஆயத்தமில்லாத ஒரு வேலைக்காரனை பார்க்க முடிகிறது. அந்த வேலைக்காரனுக்கு, பொறுப்புகள் அவன் எஜமானனால் கொடுக்கப்படுகின்றது. ஆனால் அதை ஒழுங்காக செய்யாமல், தன் இஷ்டபடி அவனுக்கு கீழே வேலை பார்ப்பவர்களை அடிக்கவும், துன்புறுத்தவும் செய்கின்றான். தன்னை கேட்க ஆளில்லை என்ற மிதப்பில் அவன் குடிகாரனாகவும் மாறிவிடுகிறான். மேலும், அவன் என் எஜமான் வர நாள் செல்லும் என்று நினைத்து, மனம்போன போக்கில் நடக்கின்றான். அதினிமித்தம் அவன் எஜமான் அவனை மிகவும் அதிகமாக தண்டிக்கிறார்.

அன்பான வாலிப தம்பி தங்கைகளே, நம்முடைய எஜமானாக ஆண்டவர் இயேசு இருக்கிறார். அவர் நம்முடைய கைகளில் கொடுத்துள்ள பொறுப்புகளை உணர்ந்து செயல்பட வேண்டியது அவசியமாகும். பரிசுத்தமாய் வாழ்வது, பெற்றோருக்கு கீழ்படிவது, கர்த்தருக்குள் மணவாழ்வை அமைப்பது, நன்மை செய்வது மற்றும் நற்செய்தி சொல்வது போன்ற பொறுப்புகள் உண்டு. அதற்கேற்றார் போல் வாழ்வோம். இரண்டாயிரம் வருசமாக இயேசு வரார், வரார் சொல்றாங்க இன்னும் வரவில்லை. வரும்போது பார்த்துக்கொள்வோம் அல்லது இன்னும் நிறைய வருசம் இருக்கு என அலட்சியமாக, மனம்போன போக்கில், கர்த்தருடைய வசனத்திற்கு எதிராக வாழ்ந்தால், தண்டனை பெறுவது நிச்சயம். ஆகையால் பொறுப்பினை சரியாக நிறைவேற்றி, நம்மை தொடர்ந்து கரை திரை அற்றவர்களாக காத்துக்கொள்வோம் (எபே 5:27).

## சிறுவர்க்கான கேள்விகள்

1. திருமண விருந்திற்கு ஆயத்தமற்ற விருந்தினர்கள் என்ன சொன்னார்கள்?
2. சோம்பேறியும், ஆயத்தமற்ற ஊழியக்காரனுக்கு என்ன கிடைத்தது?
3. உலகத்தின் பாவத்தினை சுமந்து தீர்க்கின்ற ஆட்டுக்குட்டி யார்?
4. பூமியில் வாழும்போது நம்மால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு என்ன செய்ய வேண்டும்?
5. நாம் சந்திக்க போகின்ற நியாயாதிபதி யார்?

# ஆயத்தமற்ற உறவினர்கள்



கடவுளுடைய செல்லங்களா, எப்படியிருக்கிறீர்கள்? உங்கள் யாவரையும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் வாழ்த்துகிறேன்.

இந்த மாதம், ஆயத்தமற்ற உறவினர்களிடமிருந்து சில பாடங்களை கற்றுக்கொள்ளலாமா?

ஆண்டவர் இயேசு ஒரு உவமையை சொன்னார், என்ன தெரியுமா? ஒரு மனிதன் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்தான். உறவினர்கள் பலரையும் அவ்விருந்துக்கு அழைத்தான். நெடுநேரமாகியும் அநேகர் வரவில்லை. உணவு வேளை நெருங்கியதும், அவன் தனது வேலைக்காரனை விருந்தினர்களிடம் அனுப்பி, வாருங்கள் விருந்து தயாராக இருக்கிறது என்று சொல்லுமாறு அனுப்பினான்.

ஆனால், அந்த விருந்தினர்களெல்லாம், தம்மால் வர இயலாது என சொல்லி அனுப்பினார்கள். ஒருவன் நான் ஒரு வயலை வாங்கியுள்ளேன், அதை போய் பார்க்கப்போக வேண்டும் தயவுசெய்து மன்னிக்கவும் என்றான். இன்னொருவன் ஐந்து ஜோடி ஏர்மாடுகள் வாங்கி இருக்கிறேன், அதை சோதித்துப்பார்க்கப் போக வேண்டும் தயவுசெய்து மன்னித்துக்கொள் என்றான். மூன்றாவதாக ஒருவன் எனக்கு இப்பொழுதுதான் திருமணமாயிற்று, நான் வரமுடியாது என்றான் இப்படியாக அவர்கள் ஒவ்வொருவரும் சாக்குபோக்கு கூறினார்கள்.



வேலைக்காரன், எஜமானிடம் வந்து எல்லாவற்றையும் கூறினான். எஜமான் மிகவும் வருத்தப்பட்டு, விருந்து சாலை நிரம்பும்படியாக தெருக்களிலும், வீதிகளிலும் உள்ளவர்களை அழைத்துக்கொண்டுவா என்றார். அழைப்பினை புறக்கணித்து, ஆயத்தமில்லாத அந்த உறவினர்களில், ஒருவர்கூட இந்த விருந்தினை உண்ண கூடாது என்றான். வேலைக்காரனும் அப்படியே செய்தான்.

பிள்ளைகளே! இன்றைக்கு நீங்களும், சபையில் தொழுகை செய்ய, சின்ன சின்ன வேலை செய்ய, பாய் விரிக்க, நாற்காலி போட, பாட்டுப் எடுத்துவைக்க, கைபிரதி கொடுக்க அநேக நேரம் அழைப்புக் கொடுக்கப்படுகிறது. அந்த அழைப்பிற்கு நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்களா? அல்லது ஏதாவது சாக்குபோக்கு சொல்லி ஆயத்தமற்றவர்களாக இருக்கிறீர்களா? எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கும்போது கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார். இருப்பீர்கள் தானே?

**மனப்பாட வசனம் : லூக்கா 12:47** "தன் எஜமானனுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான்."

– அன்பு ஏசுதாஸ்

# நியாதிபதியை சந்திக்க ஆயத்தப்படுவோம்



ஹாய் குட்டீஸ் ! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். ஆண்டவர் இயேசு, இந்த உலகத்தினை நியாயந்தீர்ப்பதற்காக மீண்டும் வரப்போகிறார். அப்பொழுது, என்ன நடக்கும் என்பதை குறித்து ஆண்டவர், ஒரு உவமையின் மூலம் சொன்னார். அதனை தான் இந்த மாதம் தெரிந்துகொள்ள போகின்றோம்.

மனுச குமாரனாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்து, மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட இந்த உலகத்தினை நியாயந்தீர்ப்பதற்காக வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் அமர்ந்திருப்பார்.

அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல, மனிதர்கள் அனைவரும் செம்மறி மற்றும் வெள்ளாடுகளை போன்று இரண்டு குழுவாக பிரிக்கப்பட்டு, செம்மறியாடுகளை போன்றோரை தமது வலதுபக்கத்திலும், வெள்ளாடுகளை போன்றோரை தமது இடதுபக்கத்திலும் நிறுத்துவார்.

அப்பொழுது, ஆண்டவர் வலது பக்கத்தில் நிற்பவர்களை பார்த்து, நான் பசியோடு இருந்த போது, நீங்கள் எனக்கு உணவு தந்தீர்கள், தாகமாயிருந்த போது தண்ணீர் தந்தீர்கள், உடையின்றி இருந்த போது உடை தந்தீர்கள், வியாதியாயிருந்த போது நலம் விசாரித்தீர்கள், சிறையிலிருந்த போது என்னை பார்க்க வந்தீர்கள் என பாராட்டினார். மேலும், வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்

பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள் என்றார்.

வலது பக்கத்தில் நின்ற அவர்களுக்கெல்லாம் ஒரே ஆச்சரியம் ஆண்டவரே, இதை எல்லாம் நாங்கள் எப்பொழுது உமக்கு செய்தோம் என கேட்டனர். ஆண்டவரோ, நீங்கள் பூமியில் வாழ்ந்த போது, என் சகோதரனான உங்களை போன்ற சக மனிதர்களுக்கு நீங்கள் செய்தது எல்லாம் எனக்கே செய்தது ஆகும் என்றார். அவர்களனைவருக்கும் மிகுந்த மகிழ்ச்சி உண்டானது.

பிறகு, ஆண்டவர் இடது பக்கத்தில் நிற்பவர்களை பார்த்து, நான் பசியோடு இருந்தபோது, நீங்கள் எனக்கு உணவு தரவில்லை, தாகமாயிருந்தபோது தண்ணீர் தரவில்லை, உடையின்றி இருந்தேன் உடை தரவில்லை, வியாதியாயிருந்தேன் நலம் விசாரிக்கவில்லை, சிறையிலிருந்தேன் என்னை பார்க்கவரவில்லை என கடிந்துகொண்டார்.



மேலும், சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள் என்றார்.

இடது பக்கத்தில் நின்ற அவர்களுக்கெல்லாம் ஒரே அதிர்ச்சி, ஆண்டவரே இதை எல்லாம் நாங்கள் எப்பொழுது உமக்கு செய்யவில்லை என கேட்டனர். ஆண்டவரோ, நீங்கள் பூமியில் வாழ்ந்த போது, என் சகோதரனான உங்களை போன்ற சக மனிதர்களுக்கு நீங்கள் செய்யாதது எதுவோ, அவையெல்லாம் நீங்கள் எனக்கே செய்யாதது ஆகும் என்றார். அவர்களனைவருக்கும் மிகுந்த துக்கம் உண்டானது.

குட்டீஸ்! நியாயதிபதியாகிய நமது ஆண்டவர் இயேசு வரும்போது, நாம் ஆசீர்வதிக்கபட்டவர்களாக பாராட்டை பெற்று, பரலோகத்திற்கு செல்ல, இந்த பூமியில் வாழும்போது நம்மால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு நன்மை செய்வோம். நன்மைகளை விதைப்போம் நன்மைகளை அறுப்போம்.

**மனப்பாட வசனம் : ரோமர் 2:7** “சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்.”

**– குயினி பிரதீப்**

# ஆயத்தப்படுத்திய யோவான்


**சிறுவர் பகுதி**

அன்பான மழலை செல்லங்களுக்கு, ஆண்டவர் இயேசுவின் பெயரால், அக்காவின் அன்பின் வாழ்த்துக்கள். இந்த மாதம் ஆண்டவரை சந்திக்க அநேகரை ஆயத்தப்படுத்திய யோவான் என்பவரை பற்றி நாம் தெரிந்துகொள்வோமா?

நீண்ட ஆண்டுகளாக பிள்ளை இல்லாமல் மலடியாக இருந்த எலிசபெத்திற்கும், ஆசாரியனாகிய சகரியாவிற்கும் பரலோக கடவுள் கொடுத்த பிள்ளை தான் இந்த யோவான். இவரை யோவான் என்பதைவிட யோவான் திருமுழுக்கினர் (யோவான் ஸ்நானகன்) என்றே அடையாளப்படுத்துவது புரிந்துகொள்ள மிகவும் உதவியாக இருக்கும். இந்த யோவான், கர்த்தராகிய இயேசுவை சந்திக்கவும், அவரை சந்திக்க அநேக ஜனங்களை ஆயத்தப்படுத்தவும், தன்னை அர்ப்பணித்துக்கொண்ட ஒரு தாழ்மையான, அதே வேளையில் தைரியமான ஊழியக்காரனாகவும் இருந்தார்.

இந்த யோவான் ஒட்டகமயிர் உடையைத் தரித்து, தன் அரையில் வார்க்கச்சையைக் கட்டிக்கொண்டிருந்தான்; வெட்டுக்கிளியும் காட்டுத் தேனும் அவனுக்கு உணவாக இருந்தது. அந்நாட்களில் யோவான்ஸ்நானன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான். அவனுடைய பிரசங்கத்தினை கேட்டு, எருசலேம் நகரத்தாரும், யூதேயா தேசத்தார் அனைவரும், யோர்தானுக்கு அடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் அவனிடத்திற்குப் போய், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

இதனை கேள்விப்பட்ட பரிசேயர், சதுசேயர் எனும் யூத மத குழுவினர்களும், யோவானிடம் சென்றனர். இவர்களை கண்ட யோவான், விரியன் பாம்புக் குட்டிகளே! வருங்கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ள, உங்களுக்கு வகைகாட்டினவன் யார்? மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள். ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லிக்கொள்ள நினையாதிருங்கள்; தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ணவல்லவராயிருக்கிறார். ஆகையால்,



நல்ல கனிகொடாதமரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். அதாவது கடவுளுக்கு பயந்து ஒழுக்கமாக வாழாதவர்கள் எல்லாரும் நரகத்திலே போடப்படுவார்கள் என்றார்.

அது மாத்திரமல்ல, ஆண்டவர் இயேசுவின் வருகையை குறித்தும், அதற்கு ஆயத்தமாவதை குறித்தும், எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளை சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என எச்சரித்து அநேகரை ஆண்டவரை சந்திக்க ஆயத்தப்படுத்தினார். தன்னிடத்தில் வந்த சீடர்களை ஆண்டவர் இயேசுதான் "உலகத்தின் பாவத்தினை சுமந்து தீர்க்கின்ற ஆட்டுக்குட்டி" அவர் பின்னே செல்லுங்கள், அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும் என்று சொன்னார்.

செல்லக்குழந்தைகளே! நமது ஆண்டவர் இயேசு மறுபடியும் இந்த உலகத்தினை நியாயந்தீர்க்க வருகின்றார். அதற்கு நாம் மாத்திரம் ஆயத்தப்படாமல், அநேகரை சுவிசேஷம் சொல்லி ஆயத்தப்படுத்த வேண்டும். அந்த மிகப்பெரிய பொறுப்பு நமக்கு உண்டு. நீங்க செய்வீங்கதானே.

**மனப்பாட வசனம் : மத்தேயு 28:19-20** "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்."

**- பிரியா ஆண்டனி**

# ஆயத்தமற்ற வேலைக்காரன்

அன்புள்ள செல்லப்பிள்ளைகளா ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

ஒரு ஊரின் ஒரு பெரிய பணக்காரன் இருந்தார். அவர் வெளித்தேசத்துக்கு பிரயாணமாக புறப்பட்டார். அப்பொழுது அவர் தனது வேலைக்காரரை அழைத்து, தன்னுடைய சொத்துக்களை அவரவர்களுடைய திறமைக்குத்தக்கதாக, ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும், ஒருவனிடத்தில் இரண்டு தாலந்தும், ஒருவனிடத்தில் ஒரு தாலந்துமாக கொடுத்து, அதை வைத்து வியாபாரம் செய்யும்படி சொல்லிவிட்டு, அவர் பிரயாணப்பட்டு வெளியூர் போனார்.

ஐந்து தாலந்தினை வாங்கினவன் என்ன செய்தான் தெரியுமா? அவைகளை வைத்து வியாபாரம் செய்து, இன்னும் ஐந்து தாலந்தினை சம்பாதித்தான். அது போலவே இரண்டு தாலந்தை வாங்கினவனும், வியாபாரம் செய்து இன்னும் இரண்டு தாலந்தினை சம்பாதித்தான். ஆனால், ஒரு தாலந்தினை வாங்கினவன் என்ன செய்தான் தெரியுமா? அந்த ஒரு தாலந்தினை, மண்ணை தோன்றி புதைத்து வைத்தான்.



கொஞ்ச நாள் கழித்து, அந்த எஜமான் திரும்ப வந்தார். அவர் தன்னுடைய வேலைக்காரர்களை அழைத்து, தான் கொடுத்த தாலந்துகளை குறித்து கணக்கு கேட்டார். அப்பொழுது, 5 தாலந்தினை வாங்கினவன், தான் மேற்கொண்டு சம்பாதித்த 5 தாலந்தினை காண்பித்தான். அப்படியே 2 தாலந்தினை வாங்கினவனும், தான் மேற்கொண்டு சம்பாதித்த 2 தாலந்தினை காண்பித்தான். ஒரு தாலந்தினை வாங்கினவனோ, எஜமானே, நீங்க ரொம்ப கடினமானவர், அதனால் நான் பயந்து, உங்க தாலந்தினை நிலத்தில் புதைத்து வைத்திருந்தேன், இந்தாங்க வாங்கிக்கங்கோ என்று சொன்னான்.

எஜமான், 5 மற்றும் 2 தாலந்துகளை சம்பாதித்த வேலைக்காரர்களை பாராட்டி பரிசு கொடுத்தார். சோம்பேறியான, ஆயத்தமற்ற ஊழியக்காரனுக்கோ தண்டனை கொடுத்தார்.

ஆம், செல்லப்பிள்ளைகளே, நாமும் நம்மை படைத்த பிதாவாகிய கடவுள் நமக்கு கொடுத்துள்ள திறமைகளையும், ஆசீர்வாதங்களையும் பயன்படுத்தி, மற்றவர்களுக்கு நன்மைசெய்து, அதினால் கடவுளை மகிமைப்படுத்த வேண்டும். சோம்பலாக இருந்தால், கர்த்தர் நிச்சயம் தண்டிப்பார். ஆகையால், கடவுள் கொடுத்துள்ள நேரங்களையும், தருணங்களையும் பரிசுத்தமானவைகளுக்காக பயன்படுத்தி, பரிசுத்தத்தில் வளர்ந்து, பரலோக பரிசை பெற்றுக்கொள்ள ஆயத்தமாவோம்.

**மனப்பாட வசனம் : வெளிப்படுத்தல் 22:12** "இதோ, சீக்கிரமாய் வருகிறேன். அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது."

**- பெவர்லி கிங்ஸ்லி**

# 1. துவாலைகளின் பாடம் LESSON FROM THE TOWEL

(யோவான் 13:1-17)

அ. பேதுருவிடம் இயேசு வந்தபோது, பேதுரு அவர் தம்முடைய கால்களையும் கழுவபோகிறாரா என்று கேட்டார்.

ஒரு அடிமை செய்யும் தாழ்வான வேலையை, தாம் ஏன் செய்யப் போகிறோம் என்பது அப்போது அவனுக்குப் புரியாது. ஆனால். பிறகு புரியும் என்று விளக்கிச் சொன்னார். அதாவது அவருடைய மரணம் உயிர்த்தெழுதல், பரமேறுதல் மற்றும் ஆவியானவருடைய வருகைக்குப் பின்பு அவருக்குப் (பேதுருவுக்கு) புரியுமென்றார்.

1. பேதுருவுக்கு புரியவில்லை தன்னுடைய கால்களை, இயேசு ஒருபோதும் கழுவக்கூடாது என்றார். கிரேக்க மொழியிலே அந்த வாக்கியத்தில் இரண்டு எதிர்மறை சொற்கள் இருக்கின்றன. அது சொன்ன எதிர்மறையை, மேலும் அழுத்திச் சொல்வதற்காக ''நீர் ஒருபோதும் என் கால்களைக் கழுவக்கூடாது."
2. உன் கால்களை நான் கழுவாவிட்டால் நமக்குள் ஐக்கியம் இருக்காது என்று இயேசு சொன்னார்.
3. பேதுரு பதிலாக, "என் சரீரம் முழுவதையும் கழுவும்" என்றார்.
4. தனக்குரிய தாழ்மையிலே, கிறிஸ்துவை விடவும் அதிகமாக தனக்குத் தெரியும் என்று பேதுரு நினைத்தார். நம்மில் அநேகருக்கு இருக்கும் பிரச்சனை பேதுருவுக்கும் இருந்தது. கடவுள் ஒன்றை பார்க்கிறது போல் நாமும் பார்க்க வேண்டும்.

ஆ. அசுத்தமான பாகங்கள் கழுவப்பட்டால் போதும் என்று இயேசு சொன்னார்.

1. பின் இயேசு, அனைவரிடமும் பேசுகிறார். அவர்கள் அனைவரும் சுத்தமாயிருக்கிறார்கள்.
2. ஆனால், அவர்களில் அனைவரும் சுத்தமாயிருக்கவில்லை. இது தெளிவாகவே யூதாசைப் பற்றிய குறிப்பாகும் (13:11). அவர்கள் அனைவரும் சரீரத்தில் சுத்தமாயிருந்தார்கள், ஆன்மாவிலல்ல. யூதாசுக்கு இருந்த பிரச்சனை அசுத்தமான கால்களல்ல. ஆனால், அவனுடைய அசுத்த இருதயமாகும்.

இ. இங்கே ஆவிக்குரிய ஒரு பாடத்தை, இயேசு போதிக்கிறார். இயேசு சிலுவையிலே அவமானப் படுத்தப்பட்டு அனுபவித்த பாடுகள் மனிதர்களையும், மனுஷிகளையும் அவர் சிந்திய இரத்தத்தால் பாவங்களை சுத்திகரிக்கும்.

1. இயேசுவானவரால், நாம் அனைவரும் கழுவப்பட வேண்டும். இயேசுவானவரின் இரத்தம் நம் அனைவரின் பாவங்களை கழுவும். தம்முடைய சொந்த இரத்தத்தினாலே நம்மைக் கழுவிய அவருக்கே மகிமை (வெளிப்படுத்தின விசேஷம் 1:5).
2. அப்போஸ்தலர் 22:16
3. வாழ்க்கையில் நாம் அழுக்காக கடந்து செல்லும் போது, தொடர்ந்து கழுவப்படுவது நமக்கு அவசியமாயிருக்கிறது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், நம்முடைய பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அனியாயத்தையும் நீக்கி, நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியுள்ளவராயிருக்கிறார். (யோவான் 1:9).

மகிழ்ச்சியின் பாடம் (யோவான் 13:12-17).

அ. கால்களைக் கழுவ நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

1. இயேசு, தன் இடத்திற்குத் திரும்பி வந்த பின்பு, நாம் செய்ததை புரிந்துகொண்டீர்களா என்று அவர்களை கேட்டார். கருத்து இன்னதென்று உங்களுக்குப் புரிகிறதா?
2. சேவை செய்துகொண்டு எஜமானாக இருப்பது ஒன்றும் பொருந்தாதொன்றில்லை.
3. இயேசு சொன்னார்: நீங்கள் என்னை போதகர் என்றழைக்கிறீர்கள். அவர்களுடைய போதகராக அவர் இருந்தார். போதகருக்கு எது பொருத்தமாயிருக்குமோ அது சீடர்களுக்கும் பொருத்தமாயிருக்கும்.
4. இயேசு, அவர்களிடம் தம்முடைய கால்களைக் கழுவும்படி சொல்ல நாம் எதிர்பார்க்கலாம். இன்னும் அவர்கள் அசுத்தமாகவே இருக்கிறார்கள். நம்மில் அநேகர் இயேசுவின் கால்களைக் கழுவ தயங்கமாட்டோம். ஆனால், அவர் அவர்களை ஒருவர் கால்களை ஒருவர் கழுவ வேண்டுமென்று விரும்புகிறார்.

II. எந்த கால்களை கழுவ வேண்டும் என்று இயேசு விரும்புகிறார்?

1. நம் நண்பருடையவைகளையா? அது மிகவும் மோசமாயிருக்காது.

2. ஆனால் இயேசு, மற்றவர்களுடைய கால்களை கழுவியது போல் யூதாசின் கால்களையும் கழுவினார்.

3. நாம் எல்லாருடைய கால்களையும் கழுவ வேண்டும். நண்பன், பகைவன் இருவரது கால்களையும் சமமாகக் கழுவ வேண்டும் (13:16).

4. கால்களைக் கழுவும் சடங்கு ஒன்றை நாம் செய்ய வேண்டுமா?

1. எப்போதாவது சில மதக் கூட்டத்தார் செய்கிறார்கள். இதிலே பங்குபெறும்படி தேர்ந் தெடுக்கப்படுவார்கள். சுத்தமான பாதங்களோடு சபைக்கு வருகிறார்கள். யார் கழுவுகிறார்களோ அவர்கள் சுத்தமான கால்களுள்ள வரிசையையே சரியாகக் கழுவுகிறார்கள். முக்கியமான அடிப்படை நோக்கம், அசுத்தமான கால்களைக் கழுவ வேண்டுமென்கிறது தொலைந்து போகிறது.

2. புதிய ஏற்பாட்டில், இதைத்தவிர வேறு ஒரு இடத்தில் இதைப்பற்றி குறிப்பிட்டிருப்பது 1 தீமோத்தேயு 5:9-10 வசனங்களில், இங்கே சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டிய விதவைகளின் தகுதிகளைப் பற்றி குறிப்பிடுகையில் இதைச் சொல்லுகிறார்.

3. ஆதிக் கிறிஸ்தவர்களின் துவக்க காலக் குறிப்புகளில், கால் கழுவுவதை பற்றி ஒன்றும் குறிப்பிடபடவில்லை. அந்த விதமான சடங்கு, சபைத் தொழுகையில் துவக்க காலங்களில், ஒருபோதும் கைக்கொள்ளப்படவில்லை.

4. சார்லஸ் ஹட்ஜ் சொன்னபடி நாம் கால் கழுவுவதைப்பற்றிய விவாதங்களில் வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால், நாம் இன்னும் கால்களைக் கழுவ கற்றுக்கொள்ளவில்லை. இந்த 21ம் நூற்றாண்டில் சமமாயிருப்பவர்கள் பிறருக்கு சேவை செய்ய மனதாயிருக்கிறார்கள். அவர்கள் யாராயிருந்தாலும் கவலையில்லை. அதற்காக எவ்வளவு செலவானாலும் கவலையில்லை. அந்த வேலை எவ்வளவு மோசமானதாயிருந்தாலும் கவலையில்லை.

5. ரூத் ஹார்ம்ஸ் கால்கின் என்பவர் ''நான் அதிசயப்படுகிறேன்" என்ற தலைப்பில் ஒரு கவிதை எழுதினார். ''கர்த்தாவே, மிகுந்த மகிழ்ச்சியிலும் எப்படி ஊக்கமாய் உமக்கு ஊழியம் செய்கிறேன், என்பது உமக்கு தெரியும்." ''பெண்கள் சங்கத்தில் எவ்வளவு உணர்வு பூர்வமாய் உமக்காகப் பேசுகிறேன்" என்பது உமக்குத் தெரியும். "ஒரு ஐக்கியக் கூட்டத்தை கட்டி உருவாக்கும்போது உற்சாகப் பெருக்கில் செயல்படுகிறேன்" என்று உமக்குத் தெரியும். "வேத வகுப்பில் எனது உண்மையான உற்சாகம்" உமக்குத் தெரியும். ஆனால், நான் எப்படி செயல்படுவேன்? வியக்கிறேன்.

6. உனக்காக ''எத்தனை பேர் வேலை செய்கிறார்கள்" என்று உலகம் கேட்கிறது. "கர்த்தர் கேட்கிறார், எத்தனை பேருக்காக நீ பணி செய்கிறாய்? என்று.

IV. கால்களைக் கழுவுவது என்பது மகிழ்ச்சிக்கான திறவுகோல் (13:17).

1. ஏதோ தெரிந்துவைத்திருப்பது மட்டும் போதுமானதல்ல. பிறருக்கு நாம் சேவை செய்ய வேண்டும். கண்டிப்பாக நாம் செய்ய வேண்டும்.

2. பாக்கியவான் என்கிற வார்த்தையும் இயேசு பரமானந்தத்தைப் பெறுவதற்காக போதித்த வார்த்தைகளிலே சொன்ன பாக்கியவான் என்பதும், ஒரே பொருளுடையதுதான். இது புறச்சூழலைச் சார்ந்திராத உள்ளான சந்தோஷம் அல்லது மகிழ்ச்சியை குறிப்பிடுவதாகும்.

3. உலக அளவுகளின்படி இது பொருள் தராது. சந்தோஷம் என்பது பிறர் தரும் பொருட்களாலோ அல்லது பிறர் நமக்கு செய்யும் சேவையாலோ கிடைப்பது என நாம் நினைக்கிறோம். ஆல்பர்ட் சுவைட்சர் என்பவர் குறிப்பிடுவது, உங்களுடைய முடிவு எப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று எனக்குத் தெரியும் மக்களுள் யார் சந்தோஷமாயிருப்பார் என்றால், பிறருக்கு சேவை செய்யும் வழியைக் கண்டுபிடித்தவர்தான்.

(அடுத்த இதழில் தொடரும்...)

# ஜூலை மாத கேள்விகள்

1. "உன் தேவனை சந்திக்க ஆயத்தப்படு" என வாசிப்பதெங்கே?
2. அன்னாள் என்னும் தீர்க்கதரிசி எதை விட்டு நீங்காதிருந்தாள்?
3. தாவீது தன் ஆத்துமா யார் மேல் தாகமாயிருக்கிறது என்று சொன்னார்?
4. மணவாளன் தங்களைவிட்டு போனபின்பு தோழர்கள் என்ன செய்வார்கள்?
5. தேவன் யாருக்கு அதிகமான கிருபையை அளிக்கின்றார்?
6. தேவனுக்கு முன்பாக நன்மையும் பிரியமாயிருப்பது எது?
7. கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டுள்ளது யார்?
8. தங்களைக்கொண்டு தங்களை அளந்து கொள்கிறவர்கள் எப்படிபட்டவர்கள் என பவுல் சொல்கின்றார்?
9. தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராத ஊழியக்காரன் என்ன செய்யப்படுவான்?
10. "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்" என்று சொன்னவர் யார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்**

**அனுப்ப வேண்டிய முகவரி : சகோதரி. பேபி ராஜா**
**45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,**
**அரசரடி, மதுரை - 625 016**
**செல்: 92 4421 4421, 92 4431 4431**

## சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. எபி 4:13 | 6. யாத் 3:14 |
| 2. எரே 32:17 | 7. ஆதி 16:13 |
| 3. உபா 33:27 | 8. யாத் 34:14 |
| 4. வெளி 4:8 | 9. யாத் 17:15 |
| 5. சங் 145:3 | 10. ஆதி 22:14 |

## சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. C. வைலட் கிறிஸ்டிபாய் – தளவாய்புரம்
2. Mrs. ஜெனி – கரூர்
3. G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
4. Mrs. ஹெப்சிபா தாமஸ் – படப்பை
5. Mrs. ஹெலன் திலக் – மதுரை
6. S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
7. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
8. Mrs. ஜெயமணி ராஜம்மாள் – கடலூர்
9. A.G. சாமுவேல் – தூத்துக்குடி
10. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
11. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
12. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
13. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
14. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
15. J. சுந்தரபாய் வில்லியம் – சேலம்
16. Mrs. R.P. டேவிட் – ஏற்காடு
17. Mrs. பெரில் பாஸ்கர் – படப்பை
18. Mrs. ராணி சாந்தகுமார் – மதுரை
19. S. பாக்கியராஜம் – மதுரை
20. Mrs. அன்னதாய் ஆல்பர்ட் – தூத்துக்குடி
21. Mrs. மேரி ராஜ் – மதுரை
22. Mrs. லீலா ஜோசப் – கோவை
23. S. நிர்மலா – நெல்லை
24. B. ஜாய்ஸ் ஜோசுவா – வெள்ளறம்
25. J. விஜய் – மதுரை
26. G. ஏஞ்சலம்மாள் – மதுரை
27. R. ஞானசிரோன்மணி – மதுரை
28. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
29. Mrs. சமாதானம் பீட்டர் – விருதுநகர்
30. Mrs. A. இமால்டா சுந்தர்சிங் – ஈரோடு
31. J. ஜான்சி – ஆனைமலை
32. Mrs. D. குளோரி திலகவதி – சென்னை
33. P. ஜெயராஜ் செல்வி – நாமக்கல்
34. M.S. ஜேம்ஸ் – திண்டுக்கல்
35. A. ஆனந்த கதிரோன் – சென்னை
36. R. சரோஜா – தென்கலம்
37. Mrs. செல்வமணி ஜேம்ஸ் – சேலம்
38. Mrs. D. மீனாள் தெய்வசிகாமணி – மூலனூர்
39. D. வர்ஷினி – மூலனூர்
40. P. பரமேஸ்வரி – மூலனூர்
41. D. விக்னேஷ்– மூலனூர்

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

**Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH**
Place of Publication : **Arasaradi, Madurai**
Printer's Name : **N. JAYAKARTHIKEYAN**
**Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819**
**Registered News Paper No. : TNTAM/2011/42166**
**Postal Registration No. : TN/MA/67/2021 - 2023**
**Date of Publication : 8th July 2021**
**Posted at Arasaradi HPO on 10th 11th July 2021**

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்




அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்





## கைபிரதிகள்



உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

## BIBLE STUDY BOOKS IN ENGLISH




**AVAILABLE FOR SPECIAL PRICE!**

If undelivered please return to :

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers